1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை அதிகாரிகளோடு அவரே கலந்து பேசி, அங்கே பணியாற்றுகின்ற களப்பணியாளர்களே, அவருக்கு பதிலை கொடுத்து இருக்கிறார்கள். இருந்தும், இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*9025—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரி மருத்துவமனையில் ஏற்கெனவே இரத்த சேமிப்பு நிலையம் இயங்குவதால், இக் கேள்விக்கிடமில்லை.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சரியான தகவல் தரப்படவில்லையோ என்று நான் அச்சப்படுகிறேன். கிருஷ்ணகிரி மருத்துவமனையில் பிளட் பேங்க் இல்லை. பிளீடிங் (Bl eding) ரூம், ரெஸ்ட் ரூம், ஸ்டோர் ரூம் என்று சொல்லக்கூடிய எதுவுமே இல்லை. ரத்தத்தை இனம் பிரித்துப் பார்க்கின்ற ‘ குரூப் சீரா ’ கிடையாது. தர்மபுரி தலைமை மருத்துவமனையிலே (Double R.H. Typing) கூட கிடையாது. தலைவர் அவர்களே, சுழன்றோடிக்கொண்டிருக்கிற ரத்தத்தின் கணிசமான பகுதி சிதறி தரையிலே விழுந்து சூடாற்றுப் போகுமானால் மனிதன் செத்துப்போவது என்பது நிதர்சனமான உண்மை. கிருஷ்ணகிரி, என். எச். 46, என். எச். 7 என்று இரண்டு தேசிய பெருவழித் தடங்கள் இணைகின்ற ஒரு பெரிய நகரம் அது. அன்றாடம் விபத்துக்கள் நடக்கின்றன. அன்றாடம் சாவுகள் நடக்கின்றன. பிளட் பேங்க் என்பது எங்களுடைய கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே முழு

அளவிலான அனைத்து உபகரணங்களைக் கொண்ட ஒரு ரத்த சேமிப்பு நிலையத்தை அமைத்துத்தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் மருத்துவ பட்டதாரியாக இருப்பவர்கள். அவர்கள், அங்கே இருக்கிற ரத்த சேமிப்பு நிலையம் மேம் படுத்தப்படுமா என்று கேட்டிருந்தால் அதற்கான பதிலை சொல்லியிருக்க முடியும். இல்லவேயில்லை என்று சொன்ன காரணத்தினாலேதான், அங்கே ரத்த சேமிப்பு நிலையம் இருக் கிறது. அதிலே உதவி மருத்துவ அலுவலர் ஒருவரும், செவிலி யர் ஒருவரும், மருத்துவமனை ஊழியர் ஒருவரும் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். பெரும்பாலான மருத்துவமனை களிலே இவ்வாறு உருவாக்கப்படுகிற ரத்த சேமிப்பு நிலையங்கள், வருகிற நபர்களிடமிருந்து ரத்தத்தைப் பெற்று உடனடி யாகக் கொடுக்கிற ரத்த சேமிப்பு நிலையங்களாகத்தான் செயல்பட்டு வருகின்றன. ரத்த சேமிப்பு நிலையம் முழுமையாக இயங்க வேண்டுமென்று சொன்னால் அங்கே குளிர் சாதனம் செய்யப்பட்ட ஒரு அறையும் குளிர்சாதனம் செய்யப்பட்ட மருத்துவ வசதிகளும் உடைய அறை முழுமையாகத் தேவைப்படு கிறது. அப்படி ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னால் 8.5 இலட்சம் ரூபாய் ஒரு முழுமையான ரத்த சேமிப்பு நிலை யத்தை உருவாக்குவதற்கு செலவாகிறது. ஆகவே, இப்போது இருக்கிற பெரும்பாலான இடங்களில், வருகிற நபர்களிடமிருந்து ரத்தத்தை எடுத்து உடனடியாகத் தேவைப்பட்டால் கொடுக்கிற வசதிகள் மட்டுமே செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக இவைகளை, முழுமையாக ரத்தசேமிப்பு நிலையங்களாக மாற்று வதற்கான பொறுப்புகளை அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய வினாவை யும் விடையையும் கேட்டு எங்களுடைய ரத்தமே உறைந்துவிடும் போலிருக்கிறது. (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழவியை, குமரி என்று எப்படி ஏற்றுக்கொள்வது என்பது என்னுடைய மற்றொரு வினாவாக இருந்தாலும்கூட..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒப்பனை கூடினால் ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''Bloo.. Donation : Rise in Aids injected Donors''

1990 ஏப்ரல் 9]

என்று தலைப்பிட்டு, இன்றைக்குக்கூட, 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 5 பத்தி செய்தி ஒன்று வந்திருக்கிறது. மெட்ராஸ், பாம்பே, கல்கத்தா, டெல்லி போன்ற பெரிய நகரங்களில் இந்த ரத்தத்தில் எயிட்ஸ் போன்ற 'கில்லர் டிசீஸ்' என்று அழைக்கக் கூடிய வியாதிக்காக பரிசோதனை செய்கின்ற வசதி உடனடியாக ஏற்படுத்தப்படும் என்ற அந்த செய்தியில் அறிக்கை வந்திருக்கிறது. அப்படியானால், கிருஷ்ணகிரி போன்ற சிறிய நகரங்களில், கிராமப் புறங்களிலே வாழ்கின்ற மக்களை எயிட்ஸ் போன்ற நோயிலிருந்து யார் காப்பாற்றுவது? ஆண்டவன் காப்பாற்றுவான் என்று சொன்னார்கள், நானும் ஆண்டவனை நம்பித்தான் கேட்கிறேன், ஆண்டவன் ஆளுகின்றவன், ஆளப்போகின்றவன் என்று முக்காலமும் காட்டி தொகை தொகையாய் காரியமாற்றி வினை முடிக்கும் டாக்டர் கலைஞருடைய ஆட்சியில், கிருஷ்ணகிரியில் ஒரு முழு அளவிலான, முழு உபகரணங்களைக்கொண்ட ஒரு ரத்த சேமிப்பு நிலையம் உடனடியாக அமைத்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலே எயிட்ஸ் நோய் பரவாமல் இருக்க வேண்டுமென்பது தான் அரசினுடைய நோக்கம். ஆகவே, பரவுகின்ற இடங்களிலே, முக்கியமான நகரங்களிலேயெல்லாம் எயிட்ஸ் நோயைப் பரிசோதிப்பதற்கான வாய்ப்புகளை அரசு செய்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6629 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகிறது.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டுள்ளது.

கைத்தறிக்குத் தேவையான மூலப் பொருள்களின் விலை.

*1537—திரு. எஸ். எஸ். கருப்பசாமி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கைத்தறிக்குத் தேவையான நூல், பட்டு, சாய மருந்துகள் போன்ற மூலப் பொருள்களின் விலை உயர்ந்திருப்பதை அரசு அறியுமா?